**1958**ம் ஆண்டு முடிவில், நாணய கேள்விப் பொறுப்புகளில், **73.8** சதவீதமாக விருந்த சர்வதேச ஒதுக்கு நிதியின் விகிதம், **1959**ம் ஆண்டு முடிவில் **48.2** சதவீத மாகக் குறைந்தது.

காலத்திற்கு காலம், ஸ்டேர்லிங், டொலர் இரண்டிற்கும் இடையே உள்ள மாற்று விகித மாறுபாடுகளுக்கு இயைய, அமெரிக்க டொலர்களுக்கு மகா வங்கியின் விகிதம் மாற்றப்பட்டது.

**வருமானமும் செலவும்:** இவ்வாண்டு, மகா வங்கியின் வருமானம் ரூ. **2,05,644,703–30** சதம் ஆகும். நாணய விதி அதிகாரச் சட்டத்தின் **38**ம் பகுதிக் கேற்ப, ஒதுக்கு நிதிக்குச் செலுத்தப்பட்ட தொகையான ரூ. **82,15,879–78** சதத்தையும் சேர்த்த செலவு, ரூ. **1,55,64,703–30** சதமாகும். **1959**ம் ஆண்டு மார்கழி மாத முடிவில் வங்கியின் மொத்தச் சொத்துகளுக்கும், அந்நிய நாணயத்தில் உள்ள வங்கியின் சொத்துகளுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தின் **15** சதவீதத்திலும் பார்க்க, வங்கியின் மூலதனத் தொகை குறைவாக இருந்தமையால், தேறிய இலாபமான **50** இலட்சம் ரூபாய்கள், நாணய விதி அதிகாரச் சட்டத்தின், **39 (b)** பகுதிக் கேற்ப மூலதன உபரிக்கு வரவு வைக்கப்பட்டது. மூலதன உபரி இப்பொழுது **230** இலட்சம் ரூபாய்களாக இருக்கின்றது.

## V. ஆளணி

**1959**ம் ஆண்டு ஆடி மாதம் முதலாம் திகதியன்று சேர். ஆர்தர் ரணசிங்க, மகா வங்கியின் ஆட்சியாளர் பதவியை விட்டு நீங்கினர். அத்திகதி முதல் திரு. டீ. டபிளியூ ராஜபத்திரன அப்பதவிக்கு நியமிக்கப்பட்டார். நாணயச் சபையின் நியமன அங்கத்தினரான திரு. ஜே. தியாகராஜா மீண்டும் அப்பதவிக்கு நியமனம் செய்யப்பட்டார். **1959**ம் ஆண்டு **28**ம் திகதி முதல் பங்குனி **9**ம் திகதிவரை திரு. டி. டபிளியூ. ராஜபத்திரன, சிரேட்ட உப ஆட்சியாளராக இருந்த காலத்தில் உத்தியோக அலுவலாக புதுடில்லிக்குச் சென்றிருந்த போது திரு. டபிளியூ. தென்னக்கோன், சிரேட்ட உப ஆட்சியாளராக்கப்பட்டார். மகா வங்கி ஆலோசகராக இருந்த திரு. ஜி. பி. பென்னட், **1959**ம் ஆண்டு வைகாசி மாதம் முதலாம் திகதி வங்கியை விட்டு நீங்கினர்.

ஆட்சியாளர்களுக்கு உதவியாளராகவிருந்த திரு. பி. எம். ஜெயராஜன் சர்வதேசப் பண நிதியில் மாற்று நிர்வாக இயக்குநராக, **1959**ம் ஆண்டு கார்த்திகை மாதம் முதல், **1960** ஆண்டு ஐப்பசி மாதம் வரை, கடமையாற்றுவதற்காக அனுமதிக்கப்பட்டார். 'சர்வதேச புனருத்தாரண அபிவிருத்தி வங்கியின்' மாற்று நிர்வாக இயக்குநராகக் கடமையாற்றிய திரு. டி. சி. குணசேகர, **1959**ம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் அதை விட்டு நீங்கினர். **1959**ம் ஆண்டு கார்த்திகை மாதம் **23**ம் திகதி முதல் அவர் மகா வங்கியில் ஆட்சியாளர்களுக்கு உதவியாளராக நியமிக்கப்பட்டார்.